பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 184

வெள்ளிக்கிழமை
30 மே 2025

வைகாசி 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

முல்லைத்தீவு – குருந்தூர்மலை

## இரு விவசாயிகளுக்கும் மீண்டும் விளக்கமறியல்

முல்லைத்தீவு, மே 30
முல்லைத்தீவு - குருந்தூர்மலையில் தொல்பொருள் பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இரண்டு 11

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியில்

# குண்டுவெடிப்பு, துப்பாக்கிச்சூடுகளால் உயிரிழந்தோரின் உடல்களே புதைப்பு!

முல்லைத்தீவு நீதிமன்றத்தில் அறிக்கை



**முல்லைத்தீவு, மே 30**

**கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் அகழ்ந்து எடுக்கப்பட்ட மனித என்புத் தொகுதிகளை பகுப்பாய்வுக்கு உட்படுத்தியதில், இறப்புக்குக் காரணமாக குண்டுவெடிப்புகளும் சூட்டுக்காயங்களும் காணப்படுகின்றன என்று முல்லைத்தீவு மாவட்ட சட்ட மருத்துவ அதிகாரி க.வாசுதேவா தெரிவித்துள்ளார்.** 11

## 10 ஆண்டுகளில் யாழ். மறுமலர்ச்சி!

அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 30
யாழ்ப்பாண மாவட்டத்தில் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, சுற்றாடல், சுற்றுலா உட்பட அனைத்து 11

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி

## அதிகமான சடலங்கள் பெண்களுடையவை!

முல்லைத்தீவு, மே 30
முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட என்புத் தொகுதிகளில் பெண்களுடையவையே அதிகமாகக் காணப்படுகின்றனவென நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
இதன்படி, புதைகுழியிலிருந்து 11

## இனப்படுகொலை இடம்பெற்றதாக தெற்கிலும் பல்வேறு நிகழ்வுகள்!

பொதுஜன பெரமுன கவலை



கொழும்பு, மே 30
இலங்கையில் இனப்படுகொலை நடந்ததாகக் கூறி தெற்கிலும் நிகழ்வுகள் நடத்தப்படும் நிலை உருவாகிவிட்டது. இதனை தடுக்காமல் அரசாங்கம் மௌனம் காப்பது பாரதூரமான விளைவுகளேயே ஏற்படுத்தும் 11

## தவறான முடிவெடுத்து முதியவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மே 30
யாழ்ப்பாணம் நகரப்பகுதிக்கு அண்மித்ததாக வசித்துவந்த முதியவர் ஒருவர் தூக்கிலிருந்து சடலமாக நேற்று மீட்கப்பட்டுள்ளார். 11

## தமிழரசுக் கட்சிக்கு அஞ்சியே மீளப்பெறப்பட்டது வர்த்தமானி

சரத் வீரசேகர சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 30
பிரிவினைவாதக் கட்சியான தமிழரசுக் கட்சிக்கு அடிபணிந்தே வடமாகாணத்தில் காணி மீள்நிர்ணயம் நிறுத்தப்பட்டுள்ளது. முழு நாட்டிலும் செய்யப் 11

‘கரம்போர்ட்’ ஊழல் வழக்கு

## மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு 20 வருடங்கள் கடூழியச் சிறை!

நளின் பெர்னாண்டோவுக்கு 25 வருடங்கள்

கொழும்பு, மே 30
லஞ்சம் மற்றும் ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுகளுக்காக முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு 20 வருடங்கள் சிறைத் தண்டனையும், சதொச நிறுவனத்தின் முன்னாள் தலைவரும் முன்னாள் வர்த்தக அமைச்சருமான நளின் பெர்னாண்டோவுக்கு 25 வருடங் 11




‘கோடிக்கணக்கில அடிச்சவன் எல்லாம் தப்புறாங்கள் வெறும் பென்ட்ரைவ் வாங்கினவை தான் மாட்டுகினம் பாருங்கோ’

யாழ். ஒருங்கிணைப்புக்குழுவுக்கு

## இனிமேல் ஆளுநரும் இணைத்தலைவர்!



யாழ்ப்பாணம், மே 30
யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் இணைத்தலைவராக வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன் நியமிக்கப்பட்டுள்ளார்.
கடந்த அரசாங்கங்களின் ஆட்சிக் காலத்தில் மத்திய அரசாங்கத்தின் 11

## யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்பு இன்று

யாழ்ப்பாணம், மே 30
யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் இன்று இடம்பெறவுள்ளது.
கடற்றொழில் அமைச்சர் 11

## லஞ்சமாகப் ‘பென்ட்ரைவ்’ கிராம அலுவலர் கைது!

யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 30
'பென்ட்ரைவ்' ஒன்றை லஞ்சமாகப் பெற்ற கிராம அலுவலர் ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத |
|---|---|---|---|---|---|---|
| திகதி 29.05.2025 | திகதி 29.05.2025 | திகதி 29.05.2025 | திகதி 29.05.2025 | திகதி 29.05.2025 | திகதி 29.05.2025 | திகதி 29.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4086 | சீட்டிழுப்பு இலக்கம் 1153 | சீட்டிழுப்பு இலக்கம் 0112 | சீட்டிழுப்பு இலக்கம் 2192 | சீட்டிழுப்பு இலக்கம் 5844 | சீட்டிழுப்பு இலக்கம் 1874 | சீட்டிழுப்பு இலக்கம் 0419 |
| ஆங்கில எழுத்து P | வெற்றி இலக்கினம் [illegible] | ஆங்கில எழுத்து X | ஆங்கில எழுத்து X | ஆங்கில எழுத்து Q | ஆங்கில எழுத்து R | ஆங்கில எழுத்து Q |
| | | | சுப்பர் இலக்கம் 20 | | | |
| வெற்றி இலக்கங்கள் 13 64 65 79 | வெற்றி இலக்கங்கள் 20 22 42 48 | வெற்றி இலக்கங்கள் 0 0 7 0 | வெற்றி இலக்கங்கள் 13 43 51 79 | வெற்றி இலக்கங்கள் 8 0 7 8 6 5 | வெற்றி இலக்கங்கள் 10 36 47 60 | வெற்றி இலக்கங்கள் 7 8 6 5 |
| விசேட எழுத்து P | | | | | விசேட எழுத்து R | |

# உள்ளூராட்சிசபை தோல்வியால் மாகாணத்தேர்தலுக்குப் பின்னடிப்பு

## அரசைச் சாடுகிறார் உதய கம்மன்பில

**கொழும்பு, மே 30**

**உள்ளூராட்சிசபைத் தேர்தலில் அடைந்த வீழ்ச்சி காரணமாக மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில்லை என அரசாங்கம் முடிவெடுத்துள்ளது என்று முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்த அரசாங்கம் எதிர்க்கட்சியாக இருக்கும்போது கூறிய அனைத்தும் பொய்யென இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. இவர்கள் சொன்ன அதே குற்றங்களை இப்போது செய்கிறார்கள். ஆட்சியைப் பிடிப்பதற்காக இவர்கள் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் பொய். நிறைவேற்றமுடியாத வாக்குறுதிகளைக் கொடுத்தனர். மக்கள் நம்பி வாக்களித்து ஆட்சியில் அமர்த்தினர். ஆட்சிக்குவந்து ஒரு வாக்குறுதியைக்கூட நிறைவேற்றவில்லை. ஆட்சியமைத்து ஆறு மாதங்களாகின்றன. எதுவுமே நடக்கவில்லை.

அதனாலேயே மக்கள் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் இந்த அரசாங்கத்துக்குச் சரியான பாகம் புகட்டியுள்ளனர். இந்த வீழ்ச்சியோடு இவர்கள் மாகாண சபைத் தேர்தலுக்குச் சென்றால் இதைவிடப் பெரும் வீழ்ச்சியைச் சந்திப்பார்கள். அதனால் அரசாங்கம் தேர்தலை நடத்துவதில்லை என்று முடிவெடுத்துள்ளது - என்றார். (எ-75)

**சுபிரி தன சம்பத** — வெற்றி வாரம் 0552

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 29.05.2025 | வியாழக்கிழமை | J | 7 0 1 3 7 9 |

**Super Ball** DLB

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 29.05.2025 | வியாழக்கிழமை | 2818 | W | 06 36 49 60 |

**சனிதா** DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 29.05.2025 | வியாழக்கிழமை | I | 16 17 22 34 | 4979 |

**SASIRI** DLB

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 29.05.2025 | வியாழக்கிழமை | 0692 | 27 29 38 |

**லக்ன ராசி** DLB

| திகதி | தினம் | இடபம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 29.05.2025 | வியாழக்கிழமை | | 01 29 33 39 | 4530 |

**KAPRUKA** DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 29.05.2025 | வியாழக்கிழமை | R | 25 | 10 27 38 69 | 1994 |

**அத கோடிபதி** DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 29.05.2025 | வியாழக்கிழமை | N | 13 27 30 59 | 2644 |

# யாழ்.மாவட்டத்தில் முதல் காலாண்டில் பிறப்புவீதம் உயர்வு

யாழ்ப்பாணம், மே 30

யாழ்.மாவட்டத்தில் இந்த வருடத்தின் முதலாம் காலாண்டில் இறப்புகளைவிட பிறப்புகளின் எண்ணிக்கை அதிகமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக வடக்குப் பிரதிப் பதிவாளர் நாயகம் பிரபாகர் தெரிவித்துள்ளார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கோரப்பட்ட தகவலுக்கமைவாக இந்தத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி 2025 ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரை யாழ்.மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட பிறப்பு எண்ணிக்கை ஆயிரத்து 572 ஆகவும் பதிவுசெய்யப்பட்ட இறப்பு எண்ணிக்கை ஆயிரத்து 373 ஆகவும் பதிவாகியுள்ளன. (ச-125)

# கடந்த ஆண்டு யாழில் பிறந்த 14 இந்தியத் தமிழ்க் குழந்தைகள்

யாழ்ப்பாணம், மே 30

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த ஆண்டு 14 இந்தியத் தமிழ்க் குழந்தைகள் பிறந்துள்ளன என்று வடக்குப் பிரதிப் பதிவாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த ஆண்டு 7 ஆயிரத்து 484 இலங்கைத் தமிழ்க் குழந்தைகளும், 5 சிங்களக் குழந்தைகளும், 14 இந்தியத் தமிழ்க் குழந்தைகளும், 17 இஸ்லாமியக் குழந்தைகளும் பிறந்துள்ளன.

தகவல் அறியும் உரிமைச்சட்டம் ஊடாகக் கோரப்பட்டமைக்கு அமைய வடக்குப் பிரதிப் பதிவாளர் நாயகம் இந்தத் தகவல்களை வழங்கியுள்ளார். (எ-125)



பூச்சித்தாக்கத்தின் மத்தியில்

# யாழில் தப்பிப்பிழைத்த மிளகாய்த் தோட்டம்!

## ஏனையவர்களையும் பின்பற்றுமாறு விவசாயக் குழுக்கூட்டத்தில் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மே 30

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் மிளகாய்ச் செய்கையில் பூச்சித்தாக்கம் பரவுகின்றபோதும் உடுவில் பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவரின் மிளகாய்ச்செய்கை எவ்வித தாக்கமுமின்றி விளைச்சலைக் கொடுத்துள்ளது.

யாழ்.மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் நேற்று நடைபெற்றபோது இதன்போது யாழ்.மாவட்டத்தில் மிளகாய்ச் செய்கையில் ஒருவித பூச்சித்தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதால் விளைச்சல் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டினர். இந்தநிலையில் உடுவில் பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் தான் மிளகாய்ச்செடி வளர்ப்பை சிறப்பாக முன்னெடுத்து விளைச்சலை அதிகளவில் பெறுவதாகக் குறிப்பிட்டார்.

அதனையடுத்து குறித்த விவசாயி மேற்கொள்ளும் நடைமுறைகளை மற்றவர்களும் பின்பற்றி பூச்சித் தாக்கத்திலிருந்து மிளகாய்ச்செய்கையை பாதுகாத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது. (ச-125)

# சஜித், ரணில் இணையாவிட்டால் எதிர்வரும் தேர்தலிலும் தோல்வி

## ஆசு மாரசிங்க அறிவுரை

கொழும்பு, மே 30

சஜித் தரப்பும் ரணில் தரப்பும் ஒன்றிணைந்து பலமான எதிர்க்கட்சி ஒன்றை அமைக்காவிட்டால் அடுத்த ஜனாதிபதி தேர்தலிலும் நாம் தோல்வியடையப் போவது நிச்சயம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இந்த அரசாங்கம் அடுத்த போயா தினத்துக்குள் கவிழும் , இந்த போயா தினத்துக்குள் கவிழும் என்று சொல்லப்படுகின்ற கதையெல்லாம் நகைச்சுவைக் கதையாகும். இந்த அரசை 6 மாதங்களுக்குள் கவிழ்ப்பதும் ஒரு வருடத்துக்குள் கவிழ்ப்பதும் சாத்தியமற்ற விடயம். இந்த வருடம் முழுவதும் இந்த அரசுக்கு அவகாசம் வழங்கவேண்டும். அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டம் இந்த வருடம் இறுதியில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றதன் பின் வருகின்ற முதலாவது வரவு - செலவுத் திட்டம் இது. இந்த வரவு - செலவுத் திட்டத்தை அடுத்த வருடம் எப்படி நடைமுறைப்படுத்தப் போகிறார்கள் என்று பார்ப்போம்.

கோத்தாபயவின் அரசாங்கம் கவிழ்ந்த போது அந்த அரசாங்கத்திலிருந்த 134 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணிலை ஜனாதிபதியாக்கி அரசாங்கத்தை அவரிடம் ஒப்படைத்தனர். அப்படியொரு நிலைமை இந்த அரசாங்கத்தில் வராது. இவர்கள் 159 பேரும் ரணிலை ஜனாதிபதியாக்குவார்களா ? அந்தளவுக்கு மூளை சரி இல்லாதவர்களா இருக்கிறார்கள்? இல்லை. இதுதான் யதார்த்தம். இந்த யதார்த்தத்துக்கு முகங்கொடுக்க நாம் பலமான எதிர்க்கட்சி ஒன்றை உருவாக்கவேண்டும் - என்றார். (எ-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதுக்கிவைத்துள்ள பணத்தை கொண்டுவர சட்ட நடவடிக்கை

*அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவிப்பு*

**கொழும்பு, மே 30**

**மோசடிகள்மூலம் வெளிநாடுகளில் சேர்த்துவைத்திருக்கும் இலங்கையர்களின் சொத்துக்களை இலங்கைக்குக் கொண்டுவருவது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, கடந்த அரசாங்கத்தில் திருடிய அரசியல்வாதிகள் இப்போது சிறையில் இருக்கின்றனர். அதிகமான விசாரணைகள் நிறைவடையும் நிலைக்குச் செல்கின்றன.

மோசடிகள்மூலம் வெளிநாடுகளில் சேர்த்து வைத்திருக்கும் இலங்கையர்களின் பணத்தை இலங்கைக்குக் கொ வருவது தொடர்பில் நடவடிக்கை எடுத்துவருகிறோம். உரிமையாளர்கள் இல்லாமல் இருக்கும் சொத்துக்களையும் அரசுடமையாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அந்தச் சொத்துகள் தொடர்பில் மக்களால் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டால் அவற்றின் உரிமையாளர்கள் அந்தச் சொத்துக்கள் அவர்களுடையதுதான் என்று உறுதிப்படுத்துவதோடு அவை ஈட்டப்பட்ட முறை அதற்காக பணம் பெறப்பட்ட முறை போன்றவற்றையும் நிரூபிக்க வேண்டும். அவ்வாறு நிரூபிக்கத் தவறினால் அந்தச் சொத்துக்கள் அரசுடமையாக்கப்படும்-என்றார். (எ-75)


# ஆசிரியர்கள் இடமாற்றம்
## மேன்முறையீடு சமர்ப்பிக்குக

யாழ்ப்பாணம், மே 30

நியாயமான காரணங்களை உடைய ஆசிரியர்களின் இடமாற்றங்களை இலங்கை ஆசிரியர் சங்கத்துடன் இணைந்து பரிசீலிக்க உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

சேவையின் தேவைகருதிய ஆசிரிய இடமாற்றம் 2024/2025 தொடர்பாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தலைமையிலான குழுவுக்கும், இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலுக்கமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, நியாயமான காரணங்களை உடைய ஆசிரியர்களின் மேன்முறையீடுகளைத் தமக்கு விரைவாக கிடைக்கச் செய்யுமாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மாகாண இடமாற்றச்சபை உறுப்பினர் சோ.காண்டீபராசா கேட்டுள்ளார். மேலதிக தகவல்களுக்கு 0773644067 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-66)



# சர்வதேச தரத்தில் மரபணுப் பரிசோதனை

கொழும்பு, மே 30

கொழும்பிலுள்ள மரபணுப் பரிசோதனை நிலையத்தின் பரிசோதனை நடவடிக்கைகள் சர்வதேச தரத்துக்கு தரமுயர்த்தப்பட்டுள்ளன. கனடாவின் உதவியுடன் யு.என்.டி.பி.யினால் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 2562 மரபணுப் பரிசோதனைகள் இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாலியல் வல்லுறவு மற்றும் துன்புறுத்தல்களால் பாதிக்கப்படுபவர்களுக்கும் குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்படுபவர்களுக்கும் தாமதமின்றி நீதியைப் பெற்றுக்கொடுக்க மரபணுப் பரிசோதனை நிலையத்தின் செயற்பாடுகள் பெரிதும் உதவும். தற்போது 4000 மரபணு மாதிரிகள் பகுப்பாய்வுக்காக அனுப்பப்பட்டிருப்பதாக நிலையத்துக்குப் பொறுப்பான மருத்துவர் பெர்னான்டோ புள்ளே தெரிவித்துள்ளார். (சு-33-6)



# யாழ். போதனாவுக்கு
## சிங்களமொழித் தாதியர்கள் அதிகளவில் நியமிப்பு

யாழ்ப்பாணம், மே 30

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு இரண்டு தாதிய பரிபாலர்களும், 268 தாதிய உத்தியோகத்தர்களும்புதிதாகநியமிக்கப்பட்டுள்ளனர். இதில் சுமார் 60 பேர் தமிழ்மொழி சார்ந்தவர்களாகவும், ஏனைய அனைவரும் சிங்களவர்களாகவும் காணப்படுகின்றனர்.

ஏற்கனவே சேவையிலுள்ள தாதிய உத்தியோகத்தர்களில் 168 பேர் வருடாந்த இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ளனர். இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குப் புதிதாக நியமனம் பெற்றுவந்த 268 புதிய தாதிய உத்தியோகத்தர்களை வரவேற்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்றது. (ச-66)

# பராமரிப்பற்ற இ.போ.ச. பஸ் சாரதிக்குச் சட்டநடவடிக்கை!

வவுனியா, மே 30

போக்குவரத்துக் குறைபாடுகளைக் கொண்ட அரச பேருந்தொன்றின் சாரதியின் அனுமதிப்பத்திரம் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் 10 நாள்களுக்குள் பேருந்தைச் சீரமைக்காவிடில் பேருந்துக்கு நிரந்தரத் தடையுத்தரவு வழங்கப்படும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பொதுப்போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுவரும் அரசதனியார்பேருந்துகள் நேற்றுமுன்தினம் வவுனியா மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் அதிகாரிகளால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதன்போது பேருந்துகளில் பல்வேறு குறைபாடுகள் உள்ளமை அவதானிக்கப்பட்டது.

இதனையடுத்தே குறித்த பேருந்தின் சாரதிகளுக்குப் பல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.




**நெல்லுக்கு இறைச்ச தண்ணி புல்லுக்கும் பொசியுமெண்டு சொல்லுவினம். ஆனால் இப்ப என்னடாவெண்டால் புல்லைப் புடுங்கிறமெண்டு அதோட சேர்த்து நெல்லையும் புடுங்கி எறியிற காலமாப்போட்டுது. இந்தமுறை ஒருங்கிணைப் புக்குழுக் கூட்டங்களில உந்த யூரியூப்பர்மாரும் படையெடுத்து. அவையள் மீடியாவுக்கெண்டு இருக்கிற கட்டுப்பாடுகளை மீறி, தங்கட இஷ்டத்துக்கு உள்ளுக்க பூந்து வீடியோ எடுத்து இடைஞ்சல் செய்தவை. அதிலையும் ஊசிக்கார எம்.பி. தன்னோட உந்த யூரியூப் பட்டாளத்தைக் கூட்டிக்கொண்டுவந்து, அதை வைச்சு சண்டித்தனமும் செய்தவர். ஒருகட்டத்தில இது எல்லைமீறிப்போக, 'இனிமேல் மீடியாக்காரருக்கு ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில அனுமதி இல்லை' எண்டு கடற்றொழில் அமைச்சர் சொல்லியிருந்தவர். பிறகு அவர் தனிப்பட மீடியாக்காரரோட கதைக் கேக்க 'நான் யூரியூப்காரரைத்தான் வரக்கூடாது எண்டு சொன்னன், மற்ற மீடியாக்காரர் வரலாம்' எண்டும் சொன்னதாக் கேள்வி.**

**ஆனால் நேற்று கிளிநொச்சி ஒருங்கிணைப் புக்குழுக் கூட்டத்தில ஒரு மீடியாக்காரரையும் உள்ளுக்கவிடேலையாம். கூட்டங்களுக்குப் போறதுக்கும், அங்க நடக்கிற விசயங்களை சனத்துக்கு செய்தியாச் சொல்லுறதுக்கும் மீடியாக்காரருக்கு அனுமதி இருக்கு. அவையள் கட்டுப்பாடில்லாமல் நடக்கிறது கூட்டம் நடத்தக் கரைச்சலா இருக்கெண்டால், மீடியாக்காரரை முதலே கூப்பிட்டு அவைக்கு விசயத்தைச் சொல்லி, அவையின்ர பேர் விவரங்களை பதிஞ்சுபோட்டு, அவைக்கெண்டு ஒரு இடத்தைக் குடுத்து செய்தியெடுக்க விட்டிருக்கோணும். இது குளத்தோட கோவிச்சுக்கொண்டு குதிக்காலைக் கழுவாமல் விட்டகதையா யூரியூப்பர்மாரில இருந்த ஆத்திரத்தை எல்லா மீடியாக்காரரிலையும் காட்டியிருக்கினம் போல. வழக்கம்போல நேற்றும் இந்த விசயத்துக்கு ஊசிக்கார எம்.பி. துள்ளிக்குச்சிருக்கிறார். 'மீடியாக்காரரை உள்ளுக்க விட்டிருக்கோணும், இது பெரிய பிழை. யாழ்ப்பாணத்திலநடக்கிற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்துக்கு நான் என்ர பேர்சனல் மீடியாக்காரரை கூட்டிக்கொண்டு வருவன். அவையை உள்ளுக்க விடாட்டி பிறகு இனி அஞ்சு வருசத்துக்கு உந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களுக்கே தலைகாட்டமாட்டன்' எண்டு சபதமெல்லாம் செய்திருக்கிறார்.**

**இதைக்கேட்ட உடன 'கணிதப்புலியான' திசைகாட்டி எம்.பி. 'இப்பவே ஒருவருசம் முடிஞ்சுது. பிறகெப்பிடி அஞ்சு வருசம் எண்டு சொல்லுவியள்? எண்டு ஊசிக்காரரை சீண்டியிருக்கிறார். உடனேயே ஊசிக்காரரும் சீறிப்பாய்ஞ்சு, கணிதப்புலி எம்.பி.யின்ர முந்தின கணக்குவழக்குக் கதையளையும், அவர் காரோட பறந்து பிரண்ட கதையளையும் சொல்ல, கொஞ்ச நேரம் கூட்டம் அமளிப்பட்டு அடங்கியிருக்கு. இண்டையான் யாழ்ப்பாண ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில மீடியாக்காரரை உள்ளுக்க விடாட்டி பெரும் பிரகண்டம் நடக்கிறது உறுதியாகிட்டுகண்டியளோ.**

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பதால், உற்சாகமாக இருப்பீர்கள். சகோதரர்களால் நன்மை உண்டாகும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**இடபம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத தனலாபம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது வீண்மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் பேச்சில் நிதானம் தேவை. மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்கள் வருகையால் வீட்டில் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக் கூடும். மகிழ்ச்சி ஏற்படும்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியான சூழ்நிலை ஏற்படும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அலுவலகப் பணிகளில் பொறுமை அவசியம்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். ஆதாயம் உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். உற்சாகமான சூழ்நிலையே காணப்படும்.

**கன்னி:** சகோதரர்களால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படும். பொறுமையுடன் இருப்பது நல்லது. தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும்.

**துலாம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். புதிய முயற்சிகளைத் தொடங்குவது சாதகமாக முடியும். உடல்நலனில் கவனம் தேவை. தாயின் அன்பும் ஆதரவும் மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**விருச்சிகம்:** உறவுகளால் ஆதாயம் ஏற்படக்கூடும். மகிழ்ச்சி உண்டாகும். இளைய சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**தனுசு:** தேவையற்ற செலவுகள் ஏற்படும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு உண்டு. பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**மகரம்:** புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்பு ஏற்படக்கூடும். நண்பர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** காரியங்களில் பொறுமை தேவை. எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன் கடன் வாங்கவும் நேரிடும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கவும். வீட்டில் சிறு சலசலப்பு ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவாக இருப்பார்கள். ஆதாயம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

# டேவிட் பீரிஸ் குழுமம் வட இலங்கையில் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக அதிகாரமளிப்பை பலப்படுத்துகிறது



இலங்கையில் உள்ள ஒவ்வொரு தனிநபரும் தங்கள் குடும்பத்திற்கு பாதுகாப்பான வாகனத்தை சொந்தமாக வைத்திருக்க முடியும் என்பதை உறுதிசெய்ய வேண்டும் என்ற நிறுவனர் திரு. டேவிட் பீரிஸின் தொலைநோக்குப் பார்வையால் உந்தப்பட்டு, டேவிட் பீரிஸ் குழுமம் நாட்டின் போக்குவரத்து நிலப்பரப்பைத் தொடர்ந்து மாற்றியமைத்து வருகிறது. எளிமையான தொடக்கத்திலிருந்தே, குழுவின் குறிப்பிடத்தக்க வளர்ச்சி, அயராத முயற்சி, அசைக்க முடியாத ஒழுக்கம் மற்றும் சமூக மேம்பாட்டிற்கான உறுதியான அர்ப்பணிப்புக்கு சான்றாகும்.

இன்று, டேவிட் பீரிஸ் குழும நிறுவனங்கள், ஆட்டோமொபைல், நிதிசேவைகள், களஞ்சியசாலை, சொத்து மேம்பாடு மற்றும் ரியல் எஸ்டேட், சூரிய சக்தி, தகவல் தொழில்நுட்பம், ஓய்வு மற்றும் பந்தயம் உள்ளிட்ட பல துறைகளில் 35 நிறுவனங்களை உள்ளடக்கிய பன்முகப்படுத்தப்பட்ட கூட்டு நிறுவனமாக உயர்ந்து நிற்கின்றன. இந்த பன்முகத்தன்மை கொண்ட போர்ட்ஃபோலியோமூலம், குழுமம் தீவு முழுவதும் உள்ள சமூகங்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு அதன் அணுகலைத் தொடர்ந்து விரிவுபடுத்துகிறது.

யாழ்ப்பாணத்தில் அதன் முதல் பிராந்திய அலுவலகம் திறக்கப்பட்டதிலிருந்து, வடக்கு மாகாணத்துடனான குழுவின் உறவுகள் பல தசாப்தங்களாக உள்ளன. 2015 ஆம் ஆண்டில் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய இடங்களில் புதிய அலுவலகங்களுடன் இந்த இருப்பு மேலும் வலுப்படுத்தப்பட்டது.

2021 ஆம் ஆண்டில், பீரிஸின் வழிகாட்டுதலின் கீழ், குழுமம் வடக்கில் செயற்பாடுகளை மேலும் மேம்படுத்துவதற்கான ஒரு கவனம் செலுத்தும் திட்டத்தை தொடங்கியது. இந்தத் தொலைநோக்குப் பார்வையின் ஒரு பகுதியாக, சமீபத்திய ஆண்டுகளில் பல தாக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் ஒரு ஆட்டோமொபைல் வேலைத் தளத்தை நிறுவுதல் மற்றும் பிராந்தியத்தில் பெண்களுக்கு தொழில்நுட்ப பயிற்சி மற்றும் மாற்று வேலைவாய்ப்புகளை வழங்கும் பெண்கள் அதிகாரமளிப்புத் திட்டத்தின் தொடர்ச்சி ஆகியவை இதில் அடங்கும்.

உள்ளூர் தொழில்களை மேலும் ஆதரித்து, குழுவின் நிதிச் சேவைகள் பிரிவு விவசாயம், மீன்பிடி மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு உதவிகளை வழங்கியுள்ளது. அதே நேரத்தில் கல்வி, விளையாட்டு, சுகாதாரம், நீர் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றை உள்ளடக்கிய சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் வடக்கில் வசிப்பவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துகின்றன.

இந்த நீடித்த உறவின் சான்றாக, டேவிட் பீரிஸ் குழுமத்தின் புதுமையான மின்சார முச்சக்கர வண்டி டாக்ஸி சேவையான 'இடிரைவ்' ஐ முன்னோடியாகக் கொண்ட கொழும்புக்கு வெளியே முதல் நகரமாகவும் யாழ்ப்பாணம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

சமீபத்தில், யாழ்ப்பாணத்தில் ஓர் ஐடி மேம்பாட்டு மையத்தைத் தொடங்குவதன் மூலமும், பல்வேறு துறைகளில் தொழில்களைத் தொடங்க வளரும் தொழில்முனைவோருக்கு மூலதனத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட 'தளிர்' என்ற பிரத்யேக விதை நிதித்திட்டத்தை அறிமுகப்படுத்துவதன் மூலமும் குழு மற்றொரு மைல்கல்லை எட்டியது. இந்த முயற்சிகள், வட இலங்கையில் பொருளாதார வளர்ச்சி, சமூக மேம்பாடு மற்றும் நிலையான வளர்ச்சியை வளர்ப்பதில் டேவிட் பீரிஸ் குழுமத்தின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகின்றன.

# வருடாந்த மஹோற்சவம்

யாழ்ப்பாணம், மே 30

யாழ்.தீவகம் தெற்கு வேலணை மேற்கூர் பெரியபுலப்பதியுறை அருள்மிகு மகா கணபதிப்பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது. அடுத்த மாதம் 9 ஆம் திகதி திங்கட்கிழமை இரதோற்சவமும், 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும் எனப் பரிபாலனசபையினரும் உபயகாரர்களும் அறிவித்துள்ளனர். (ச-25)

★★★★

குரும்பசிட்டி ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நாளைமறுதினம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை காலை சதுர்த்தி உற்சவமும் மறுநாள் சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு விநாயகர் வழிபாடும் இடம்பெறும். எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச- 25)

# விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், மே 30

நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 80 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு முன்பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டு விழா திவ்ய ஜீவன சங்க மண்டப முன்றலில் நாளைமறுதினம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது. மன்றத்தின் தலைவர் வி.ஜனகன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக சி.டி.பி வங்கி யாழ்ப்பாணக்கிளை முகாமையாளர் திருமதி சுரமியா சுதர்சன், சிறப்பு விருந்தினராக யாழ்.இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர் திருமதி தாட்சாயினி கணேசநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

கொடிகாமம், மே 30

நாவற்குழி மேற்கு கமக்கார அமைப்பின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு நாவற்குழி மேற்கு அறிவொளி மன்றத்தில் தலைவர் சு.கணேசானந்தம் தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் அழைப்பாளர்களாக கைதடி கமநல சேவைகள் நிலையத்தின் பெரும்போக உத்தியோகத்தர், நாவற்குழி மேற்கு ஜே/294 அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# ஊழல்வாதிகளுக்கு சாட்டையடி!

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கும், சதொச நிறுவனத்தின் முன்னாள் தலைவர் நளின் பெர்னாண்டோவுக்கும் கடூழியச் சிறைத்தண்டனை விதித்திருக்கின்றது மேல் நீதிமன்றம். 2015ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் இடம்பெற்ற மோசடிச் சம்பவத்தில், 10 ஆண்டுகளின் பின்னர் இவர்கள் இவரும் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டிருகின்றனர். அப்போது விளை யாட்டுத்துறை அமைச்சராக இருந்த மஹிந்தானந்த அளுத்கமகே, சதொச நிறுவனத்தின் ஊடாக 'கரம்'விளையாட்டுப் பலகைகளைக் கொள் வனவு செய்ததன் மூலம் அரசாங்கத்துக்கு 53 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுத்தியிருந்தார் என்று, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு குற்றஞ்சுமத்தியிருந்த நிலையில், அந்தக் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு குற்றவாளி களான இருவருக்கும் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கின்றது. ஊழலில் ஈடுபடுபவர்களுக்கு இந்தத் தண்டனை நல்லதொரு பாடம்.

இலங்கையைப் பொறுத்தவரையில் ஊழல், மோசடி சாதாரண விடயமாக மாறியிருக்கின்றது. நாட்டின் பொருளாதாரம் வங்குரோத்து நிலைமைக்குச் சென்றமைக்கு உள்நாட்டுப் போருக்கு அப்பால், இந்த ஊழல் மோசடிகளும் பிரதான காரணம் என்பது அனைவரும் அறிந்ததுதான். கடந்தகாலங்களில் நாட்டுக்குப் பெரும் இழப்பை ஏற்படுத்திய மோசடிகள் தொடர்பான தகவல்கள் வெளிவந்திருந்தாலும், அவற்றுடன் தொடர்புடையவர்கள் தண்டிக்கப்படவில்லை. கடந்த கால ஆட்சியாளர்கள் தங்களுக்குச் சார்பானவர்களின் குற்றங்களை கண்டும் காணாமல் இருந்ததாலும் -ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டாலும் அரசியல்வாதிகள் ஊழல், மோசடிகள் விடயத்தில் ஒன்றுமையோடு இருந்ததாலும் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்கள் இலங்கையில் தண்டிக்கப்படுவது குதிரைக்கொம்பாகவே இருக்கின்றது.

இவ்வாறான மோசடிகள், ஊழல்கள் தொடர்பாக அவ்வப்போது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டாலும் அவற்றின் விசாரணைகள் ஆமை வேகத்திலேயே நடைபெறுவதால், குற்றவாளிகள் சுதந்திரமாக தங்கள் கைங்கரியத்தைத் தொடரும் நிலைமையே இருந்தது. இழுத்தடிப்புகள் ஊடாக அந்த விடயத்தை நீர்த்துப்போகச் செய்து, குற்றங்களில் ஈடுபட்டவர்களைக் காப்பாற்றும் செயற்பாட்டையே கடந்த காலத்தில் அதிகாரத்தில் இருந்தவர்கள் முன்னெடுத்திருந்தனர். ஊழல், மோசடிகளில் ஈடுபட்டாலும் இலகுவாகத் தப்பித்துக் கொள்ள முடியும் என்ற துணிவு அதிகாரத்தின் உச்சத்தில் இருப்பவர்கள் முதல் சாதாரண அரச அதிகாரி வரையில் மனங்களில் ஏற்பட்டிருப்பதே நாட்டில் ஊழல், மோசடிகள் அனைத்துத் துறைகளிலும் வியாபிக்கக் காரணமாகவிருந்தது.


ஊழல், மோசடிகள் அற்ற நாடொன்றை உருவாக்க வேண்டுமானால், அவ்வாறான குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்படுவது அவசியம். இவ்வாறான வழக்குகள் குறுகிய காலப்பகுதிக்குள் விசாரிக்கப்பட்டு அவற்றுக்கான தீர்ப்புகள் விரைவாக வழங்கப்படுவது ஊழல், மோசடிகளில் ஈடுபவர்களைக் கட்டுப்படுத்தும். அதேபோன்று இவ்வாறான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டவர்கள் மேன்முறையீடு என்ற போர்வையில் காலத்தை இழுத்தடித்துத் தண்டனையில் இருந்து தப்பித்துக் கொள்வதையும் தடுப்பதற்கான வழிவகைகளையும் ஆராயவேண்டும். தம்மைக் கேள்வி கேட்பதற்கு எவருமே இல்லை என்ற மமதையில் - அதிகாரத்தில் இருந்து கொண்டு மக்கள் பணத்தை கபளீகரம் செய்வோருக்கு இந்தத் தீர்ப்பு ஓர் எச்சரிக்கை என்றே கொள்ளலாம். இதேபோன்று நாட்டில் இடம்பெற்ற பெரும் மோசடிகள், ஊழல்கள் இன்னமும் இருக்கின்றன, அவற்றின் சூத்திரதாரிகளையும் சட்டத்தின்முன் நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை அரசாங்கமும், உரிய தரப்புகளும் எடுக்கவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

பணம் ஆறாம் அறிவு போன்றது அதில்லாமல் மற்ற ஐந்து அறிவுகளையும் நீங்கள் பயன்படுத்தமுடியாது.

– பெர்னாட்ஷா –




# அரசாங்க ஆதரவாளர்களுக்கு வெளிநாட்டுத் தூதுவர் பதவிகள்



குற்றஞ்சாட்டுகின்றார் ஹர்சன எம்.பி.

**கொழும்பு, மே 30**
**கடந்த தேர்தலில் அரசாங்கத்துக்கு உதவி செய்தவர்கள், தேர்தலில் அரசசார்பில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்கள் போன்றவர்களுக்கு வெளிநாட்டுத் தூதுவர்கள் பதவி வழங்கப்படுகிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருணா குற்றஞ்சாட்டியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
இந்த அரசாங்கம் எதிர்க்கட்சியாக இருந்தபோது பிழையான அரசியல் நியமனங்களை எதிர்த்தது. ஆனால் இந்த அரசிலும் அவ்வாறான நியமனங்கள்தான் இடம்பெறுகின்றன. தேர்தலில் அரசாங்கத்துக்கு உதவி செய்தவர்கள், தேர்தலில் அரசசார்பில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்கள் போன்றவர்களுக்கே வெளிநாட்டுத் தூதுவர்க்ள் பதவி வழங்கப்படுகிறது. அரச சொத்துகள் துஸ்பிரயோகம் செய்யப்படுவது தொடர்பில் அன்று வாய் கிழியப் பேசிய இந்த அரசு அதே துஸ்பிரயோகத்தை இப்போது செய்கிறது. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றிபெற்ற அவர்களின் உறுப்பினர்களை அலரிமாளிகைக்கு அழைத்து வந்து கூட்டம் நடத்துகிறது. இதன் மூலம் அரசசொத்துதுஷ்பிரயோகம் செய்யப்படுகிறது-என்றார். (ஏ-75)

# தங்கத்துப்பாக்கி துமிந்தவுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, மே 30
தங்கமுலாம் பூசப்பட்ட துப்பாக்கி தொடர்பிலான வழக்கில், முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்கவின் விளக்கமறியலை, ஜூன் 5 ஆம் திகதி வரை நீடித்து கல்கிசை நீதிவான் நீதிமன்றத்தால் நேற்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
தங்கமுலாம் பூசப்பட்ட ரி-56 ரக துப்பாக்கி கைப்பற்றப்பட்டமை தொடர்பிலான விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான துமிந்த திசாநாயக்கவை நேற்று வரை விளக்கமறியிலில் வைக்கு மாறு நீதிமன்று உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



## பி.சி.ஆர். சோதனை மீண்டும் ஆரம்பம்

உலகளாவிய ரீதியில் புதிய கொரோனாத் திரிபால் ஏற்படும் அச்சுறுத்தலைக் கருத்திற் கொண்டு, சில மருத்துவமனைகளில் மீண்டும் பி.சி.ஆர். பரிசோதனைகளை சுகாதார அமைச்சு அதிகரித்துள்ளது. பி.சி.ஆர். பரிசோதனை வசதிகளைக் கொண்ட மருத்துவமனைகள் தற்போது கொரோனா நோயாளிகளைக் கண்டறிய எச்சரிக்கையுடன் செயற்படுவதாக சுகாதார அமைச்சின் செயலாளர் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார். காய்ச்சல் தொடர்பில் அனுமதிக்கப்படும், சிகிச்சை பெறும் நோயாளிகளின் கண்காணிப்பை அதிகரிக்கவும் அறிவுறுத்தியுள்ளதாகவும் செயலாளர் தெரிவித்தார். (ச-இ)

## ஓய்வூதியத் திணைக்கள இணையம் முடக்கம்

இலங்கையின் ஓய்வூதியத் திணைக்கள தரவுகள் 'க்ளோக் ரான்சம்வேர்' என்ற குழுவால் திருடப்பட்டுள்ளதாக சைபர் பாதுகாப்புக் கண்காணிப்புத் தளம் தெரிவித்துள்ளது. இந்த சைபர் தாக்குதலில் எந்தத் தரவும் இழக்கப்படவில்லை. தடையற்ற சேவை வழங்கலை உறுதிசெய்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் திணைக்களம் உறுதியளித்துள்ளது. (ச-இ)

# மாணவர்கள் மன அழுத்தம்; மீட்பதற்குச் சிறப்புத் திட்டம்

கொழும்பு, மே 30
பல்கலைக்கழகங்களில் மன உளைச்சலுக்கு ஆளாகும் மாணவர்களை மீட்பதற்காக ஒரு சிறப்புத் திட்டம் முன்னெடுக்கப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. பல்கலைக்கழகங்களில் உளவியல் நிபுணர்களை சேவையில் ஈடுபடுத்துவதன்மூலம் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படும் என்று கல்வி மற்றும் உயர்கல்வி துணை அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார். கடந்த சில மாதங்களாக பல்கலைக்கழக மாணவர்களின் உயிர்மாய்ப்புகள் மற்றும் பிற பிரச்சினைக்குரிய சூழ்நிலைகளை அடிப்படையாகக்கொண்டு கல்வி அமைச்சகம் இந்த முடிவை எடுத்துள்ளது. (ச-இ)

நாளை
வெள்ளிக்கிழமை- வைகாசி 17
31.05.2025
சுபநேரம் : 05.52- 07.22
ராகுகாலம் : 10.22 - 11.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விவசாயிகளுக்கு விதை வெங்காயம்

கிளிநொச்சி, மே 30

வடக்கு மாகாண விவசாயத்திணைக்களத்தின் விவசாய விரிவாக்கல் திட்டத்தின்கீழ் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 41 விவசாயிகளுக்கு உண்மை விதை உற்பத்திக்காக 120கிலோ சின்னவெங்காயம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு கிளிநொச்சி பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் கிளிநொச்சி மாவட்டப் பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் வி.சோதிலட்சுமி தலைமையில் நடைபெற்றது. (ச-41-113)



# இந்திய அரசின் உதவியில் மீன்பிடிப் பொருள்கள்

முல்லைத்தீவு, மே 30

இந்திய அரசாங்கம் மற்றும் இந்திய மக்களின் மனிதாபிமான உதவிகள் வழங்கும் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இந்தியத்தூதுவர் சந்தோஷ் ஜா, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.திலகநாதன், வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன்போது முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கான குளிர்சாதனப்பெட்டிகள் மற்றும் வலைகள் என்பன வழங்கிவைக்கப்பட்டன. (ச-25,113)

# இந்திய அரசின் நிதியுதவியில் முல்லையில் 'சந்திரன் கிராமம்'

முல்லைத்தீவு , மே 30

முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்ட 'சந்திரன் கிராமம்' வீடு கையளிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் கேப்பாப்பிலவு பிலக்குடியிருப்பில் இடம்பெற்றது.



முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கைக்கான இந்தியத்தூதுவர் சந்தோஷ் ஜா பங்கேற்று குறித்த சந்திரன் கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட 24 வீடுகளைக் கையளித்தார்.


நிகழ்வில் நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சர் அனுர கருணாதிலக, மேலதிகச்செயலாளர் எம்.எம்.நஷிமுதீன், வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலகநாதன், தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் தலைவர் அரவிந்த ஸ்ரீநாத், கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-25)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், மே 30


குரும்பசிட்டி ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை காலை சதுர்த்தி உற்சவமும் நாளை சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு விநாயகர் வழிபாடும் இடம்பெறும். எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச- 25)



கடும்காற்றுக் காரணமாக பளை இந்திராபுரத்தில் உள்ள தற்காலிக வீட்டின் கூரைத் தகரங்கள் பிடுங்கி எறியப்பட்டுள்ளன.

அதேவேளை சில காணிகளில் வாழை மற்றும் பயன்தரு மரங்கள் முறிந்து விழுந்துள்ளன. (ச-25,9)



# 'எழுநா'வின் தயாரிப்பில் 'நீர்த்த கடல்' ஆவணப்படம்

'எழுநா'வால் தயாரித்து வெளியிடப்பட்ட 'நீர்த்த கடல்' ஆவணப்படம் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஒழுங்கமைப்பில் பூநகரி, ஜெயபுரம் சமாசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை திரையிடப்பட்டது. வடக்கு - கிழக்குத் தமிழர் தேசக் கடற்பரப்பில் கடல் விவசாயம் எனும் போர்வையில் அமைக்கப்படும் கடலட்டை வளர்ப்புப் பண்ணைகள்மூலம் கடலைச்சார்ந்த தமிழ் மக்களின் இறைமையும், நிலைத்த பொருண்மிய வளங்களும் எவ்வாறு சவாலுக்கு உட்படுத்தப்படுகின்றன? சூழற்சமநிலையும், கடலோரப் பகுதியில் வாழும் மக்களின் வாழ்வும் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன? என்பவை தொடர்பான குறித்த ஆவணப்படம் ஆராய்கின்றது. (ச-25)

# தொல்லியல் திணைக்களத்தால் பரிமாற்றச் செயற்றிட்டம்!

யாழ்ப்பாணம், மே 30

யாழ். மாவட்டத் தொல்லியல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தமிழ்- சிங்களப் பரிமாற்றச்செயற்றிட்டம் யாழ். கோட்டைப்பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. கொழும்பு, களனிப் பல்கலைக்கழகத்தில் தொல்லியல் துறையில் பட்டப்பின்படிப்பைத் தொடரும் மாணவர்களுக்காக குறித்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது தமிழர்களின் தொட்டுணரக்கூடிய மற்றும் தொட்டுணரமுடியாத மரபுரிமைகள், வழிபாட்டு முறைகள், உணவுப் பாரம்பரியங்கள், பாரம்பரிய விளையாட்டுக்கள்,யாழ். கோட்டையின் வரலாற்று முக்கியத்துவம் எனப் பல்வேறு விடயப்பரப்புகள் தொடர்பில் ஆலோசிக்கப்பட்டன. செயற்றிட்டத்தில் மத்திய கலாசார நிதியத்தின் செயற்றிட்ட முகாமையாளர் நாளக , யாழ். பல்கலைக்கழகத்தின் கலாசார சுற்றுலாத்துறை மாணவர்கள், களனிப் பல்கலைக்கழக தொல்லியல்துறை பட்டப்பின்படிப்பு மாணவர்கள், யாழ். மாவட்டத் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளான கபிலன், மணிமாறன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25, 125)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Invitation for Bids - 04/2025
## District General Hospital Kilinochchi
## Purchasing of Air Conditioner & Installation

1. The Chairman, Regional Procurement Committee (RPC) on behalf of the district General Hospital Kilinochchi now invites sealed bids from eligible and qualified bidders for below mentioned items
   I) Purchasing of Air Conditioner & Installation
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure. (NCB)
3. Qualification requirements are indicated in section 4 of the Bidding document Additional details are provide in the schedule/Bidding Data & Contract Data (Section5)
4. Interested eligible bidders may obtain further information from address given below and inspect the bidding documents at the same place on any working days from 30-05-2025 to 11-06-2025 in between 09:00hrs and 15:00hrs
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Director of District General Hospital, A 9 Road, Kilinochchi. (T.P: 021 228 5329, Fax: 021 228 5327) from 09:00hrs to 15:00hrs. During the period from 30-05-2025 to 11-06-2025 upon payment of non refundable fees as mentioned in the table. The method of payment will be paid by cash at District General Hospital Office, Kilinochchi.
   Prebid meeting will be held on 06/06/2025 at 10.30am at Conference Hall, District General Hospital , Kilinochchi.
6. Bids (Original & Duplicate) should be handed over to the below address or deposited in the tender box available in office at District General Hospital, Kilinochchi.on or before the closing time of bids 11.30AM of 12 of June 2025. Bids will be opened immediately after closing of bids in the presence of the bidders or their representatives.
7. Prebid meeting will be held on 06/06/2025 at 10.30am at Conference Hall, District General Hospital , Kilinochchi.
8. The Chairman reserves the right to accept or partially accept any bid and to annual the bidding process and reject all bids at any time without there by incurring any liability to the bidders.

| Bid.No | Description | Qty | Non-Refundable Fee | Bid Bond | Bid Security Validity up to |
|---|---|---|---|---|---|
| Air Condotioner | | | | | |
| NP/DGH/KOC/2025/PSDG(Ad)/03 | Purchasing of Air Conditioner & Installation to DGH Kilinochchi – 24000 BTU | 6 | 1,500.00 | 22,000.00 | 08.09.2025 |
| | Purchasing of Air Conditioner & Installation to DGH Kilinochchi – 18000 BTU | 1 | | | |
| | Purchasing of Air Conditioner & Installation to DGH Kilinochchi – 12000 BTU | 1 | | | |

Further clarifications can be obtained directly from the Accountant of the District General Hospital,Kilinochchi(Tele. No. 021 228 4111 )
Chairman - RPC,
District General Hospital ,Kilinochchi.

# தினமும் புகையாகும் 520 மில்லியன் ரூபா!

கொழும்பு, மே 30
இலங்கையர்கள் சிகரெட்டுகளுக்காக ஒரு நாளைக்கு 520 மில்லியன் ரூபாவைச் செலவிடுகின்றனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

நாளை புகையிலை எதிர்ப்பு தினம் கடைப்பிடிக்கப்படவுள்ள நிலையில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

2019 ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி, புகைப்பிடிப்பதால் ஏற்படும் உடல்நலப் பாதிப்புகளால் ஏற்பட்ட பொருளாதார செலவுகள் 214 பில்லியன் ரூபா என்று மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் தெரிவித்துள்ளது.

2020ஆம் ஆண்டு உலகளாவிய வயதுவந்தோர் புகையிலைக் கணக்கெடுப்பின்படி, இலங்கையில் தினமும் மொத்தம் 3.2 மில்லியன் மக்கள் புகையிலையைப் பயன்படுத்துகின்றனர். இலங்கையில் ஒவ்வொரு ஆண்டும் 20 ஆயிரம் அகால மரணங்கள் ஏற்படுகின்றன. முறையான வரி வசூலிக்கும் வழிமுறைகள் இல்லாததால், 2024 ஆம் ஆண்டில் சிகரெட்டுகளிலிருந்து அரசாங்கத்துக்கான வரி வருவாய் 9.4 பில்லியன் ரூபாவால் குறைந்துள்ளது. இது உற்பத்தியாளருக்கு இலாபமாக மாற்றப்பட்டுள்ளது என்று மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் தெரிவித்துள்ளது. (எ-இ)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1989ம் ஆண்டு பரணி நட்சத்திரம் கிரகபாவம் 22 செவ்வாய் 8 இல் உள்ள நிரந்தரமாக அரச திணைக்களத்தில் தொழில் புரியும் (HNDIT) மணமகனுக்கு மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

0778649878, 0776343103

# மணிவிழா வாழ்த்து

Congratulations!

## சைவப்புலவர்
## திரு. செல்லையா பரமேஸ்வரன்
## அதிபர் (SLPS - 2)

15 வருடங்கள் ஆசிரியராகவும், 18 வருடங்கள் அதிபராகவும் எமது பாடசாலையில் 25.04.2016 - 30.05.2025 வரை அதிபராக சேவையாற்றி ஓய்வுபெற்று 02.06.2025 இல் மணிவிழாவைக் கொண்டாடும் எமது அதிபரின் பணிநிறைவு நன்நாளில்,
வாழும் நாட்கள் வரமாய் அமைந்து வளங்கள்யாவும் கிடைக்கப்பெற்று இல்லத்தில் இறைவன் அருளால் நல் இன்பம் பெற்று இனிமையாய் தங்கள் ஓய்வுகாலப் பயணம் தொடர ஆசிரியர்கள் நாம் சேர்ந்து வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம்.




**சேவை விபரம்.**

**ஆசிரியராக**
- 01.09.1992 - 01.01.1993 - யா/புனித கென்றிஅரசர் கல்லூரி
- 01.01.1993 - 10.01.1996 - யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்
- 11.01.1996 - 30.01.1997 - கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம்
- 31.01.1997 - 29.04.1997 - மு/மல்லாவி மத்திய கல்லூரி.
- 30.04.1997 - 31.12.2000 - யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்.
- 01.01.2001 - 22.07.2007 - யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.

**அதிபராக**
- 22.07.2007 - 31.12.2015 - யா/ஈவினை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை
- 01.01.2016 - 25.04.2016 - யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை
- 25.04.2016 - 30.05.2025 - யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக் கழகம்
## யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்

(CS/58347) J-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆதனப்பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 6. இலந்தைக்குளம் வீதி. 118ஆம் ஆதன இலக்கத்தைக் கொண்ட ஆதனம் மு.சின்னத்தம்பி பெண் செல்லம்மா என்ற பெயரில் யாழ் மாநகரசபை ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

மேற்குறித்த ஆதனத்தின் பகுதி ஆதனத்தினை தம்பு சிவவடிவேலும் பெண் சறோசாதேவியும் 2003.08.23 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சி.பொன்னம்பலவாணர் முகதாவில் 424ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் காமீம் பெண் ஜெரீனா என்பவரிற்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர். பின்னர் குறித்த ஆதனத்தை காமீம் பெண் ஜெரீனா அல்லது ஜெகந்தி ஜெரீனாவும். சிவவடிவேல் கைம்பெண் சறோஜாதேவியும் 2010.12.01 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு க.கேசவன் முகதாவில் 12119 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் நவரட்ணம் பெண் சுசிலாதேவி என்பவரிற்கு அறுதியாக விற்றுள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம். யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று சிவியாதெரு இறை பிரப்பங்குள வளவும் மறுபிரிவுகளும்" நில.பர.4 குளி 9. இதில் தெற்குப் பக்கமாக நில.பர. 2 1/4 இரண்டேகால். இதற்கு எல்லை

கிழக்கு : கையொழுங்கை
வடக்கு : இதன் மிகுதி ஆதனம்
மேற்கு : றோட்டு
தெற்கு : முருகன் பெண் பொன்னிக்குரிய ஆதனம்

இதடங்கலும் அதற்குச் சேர்ந்தவைகளும். இதன் வடக்கெல்லைக்காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் இதற்குரிய தண்ணீர்ப்பங்கும். கிழக்கெல்லைக்கையொழுங்கையால் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்.

தற்போது நவரட்ணம் பெண் சுசிலாதேவி சார்பில் அவரது அற்றோனி தத்துவகாரர்களான நடராஜா இராஜேஸ்வரனும் பெண் லலிதாவும் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் ஒரு பகுதிக்கு/ முழுவதற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது நவரட்ணம் பெண் சுசிலாதேவி எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பிரச்சினைகளுக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 04 - 11 - 1943
இறப்பு 30 - 05 - 2024

### சிவ பிரம்மஸ்ரீ சோ. இ. பிரணதார்த்திஹர குருக்கள்

வலி-கிழக்கு
ஸைவ சமய அருள்நெறி மன்றம்
நடாத்தும்
மன்றத்தின் ஸ்தாபகர் தலைவர்
**வேதாகமகிரியாபானு**
**சிவ பிரம்மஸ்ரீ சோ. இ. பிரணதார்த்திஹர குருக்கள்** அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு அஞ்சலிக் கூட்டம்

காலம்: 31.05.2025 சனிக்கிழமை மாலை 4.00 மணி
இடம்: கோப்பாய் ஸ்ரீ வீரபத்திரர் ஆலய மண்டபம்

**நிகழ்வுகள்**

- மாங்கல விளக்கேற்றல்
- இறை வணக்கம்
- திருவுருவப் படத்துக்கு அஞ்சலி
- வரவேற்புரை
- தொடக்கவுரை
- குருக்கள் அவர்களின் வாழ்க்கையும் அவரது வழிகாட்டுதலும் பற்றிய கண்ணோட்டம்.
- சைவப்புலவர் சிவத்திரு கந்த சத்தியதாசன் அவர்கள்

**நினைவஞ்சலி உரைகள்**

ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள்
(தலைவர் கோப்பாய் தனிப்பனை வீரபத்திரர் ஆலய பரிபாலனசபை)
பேராசிரியர். திரு. சி. ஸ்ரீ சற்குணராசா அவர்கள்
(துணைவேந்தர் யாழ்ப்பாண பல்கலைக் கழகம்)
கலாநிதி திரு. மா. வேதநாதன் அவர்கள்
(மேநாள் துறைத் தலைவர் இந்து நாகரிகத்துறை யாழ் பல்கலைக்கழகம்)
வைத்திய கலாநிதி கருமத்திருதி திரு. வை தியாகராஜா அவர்கள்
திருமதி மா. அனந்தலட்சுமி அம்மா அவர்கள்
(அபிவிருத்தி உத்தியோகத்தர் இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு வடமாகாணம்)

**நினைவுப் பேருரை**


உரையாள்கை - சிவப்பிரம்மஸ்ரீ தியாக மயூரகிரி குருக்கள் - நீர்வேலி விடயம் - ஈழத்து அந்தணர் வாழ்வியல் - சமகாலநோக்கு
நன்றியுரை

**அனைத்து அன்புள்ளங்களையும் தவறாது கலந்து ஐயாவின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்க அன்புடன் அழைக்கின்றோம்**

நன்றி
**வலிகிழக்கு சைவ சமய அருள்நெறி மன்றத்தினர்.**

(CS/58421) D

## மரண அறிவித்தல்



### சின்னப்பு வேலாயுதபிள்ளை

நுணாவில் மேற்கை பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கு நாவற்கட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு வேலாயுதபிள்ளை அவர்கள் நேற்று (29.05.2025) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அம்பலவானர்-பூரணம் தம்பதியரின் மருமகனும். யோகநாயகி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தர்மகுலசிங்கம். வர்ணகுலசிங்கம். மனோகரன். சிவசோதி மற்றும் சவுந்தராணி. சரவணபாவன். ஜெயபோதினி. கௌரி. கனகாம்பிகை ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கிரிஜாழினி. யாதுசன். கபிலாயினி. காலஞ்சென்ற மோகனப்பிரியன் ஆகியோரின் தந்தையும் திருமாறன். சுரேஷ் ஆகியோரின் மாமனாரும் மிதுனஜா. டினுஸ்கான். சயுரி. நக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கரியைகள் இன்று (30.05.2025) வெள்ளிக்கிழமை முற்கல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 442 1618 (மகன்)**

## அலங்கார உற்சவம்

யாழ்., மே 30 குப்பிழான் வடபத்திரகாளி அம்பாள் ஆலய(காளி கோயில்) வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும். பத்தாம் நாளான அடுத்த மாதம் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு 108 சங்காபிஷேகமும், அதனைத் தொடர்ந்து அன்னதானமும் இடம்பெறும். 9 ஆம் திகதி திங்கட்கிழமை வைகாசி விசாகப் பொங்கல் உற்சவமும் இடம்பெறுமென ஆலயப் பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ச-25,66)

## மரண அறிவித்தல்



பிறப்பு 30 . 03 . 1963
இறப்பு 29 . 05 . 2025

### கணேசன் இராசரத்தினம் (இராசன்)

வாரிவளவு காரைநகரைப் பிறப்பிடமாகவும், சிவன்கோவிலடி, சித்தங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசன் இராசரத்தினம் அவர்கள் நேற்று (29.05.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கொங்கன் கணேசன்-சுந்தரம்மா தம்பதியின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற செல்லத்துரை-மகாலட்சுமி தம்பதியின் பாசமிகு மருமகனும் கலாராணி அவர்களின் அன்புக் கணவரும் சாந்தமலர். விசயரத்தினம், செல்வரத்தினம், நாகரத்தினம், காலஞ்சென்ற கற்புக்கரசி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் செல்வராணி. ஞானேஸ்வரி. கணேசமூர்த்தி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (01.06.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 07.30 மணியளவில் சிவன் கோவிலடி, சித்தங்கேணியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**சிவன் கோவிலடி,**
**சித்தங்கேணி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**076 855 0279**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



பிறப்பு 19 . 04 . 1940

இறப்பு 28 . 05 . 2025

விஸ்வப்பிரம்மஸ்ரீ கலா பூசணம்

## ஆறுமுகம் கந்தசாமி ஸ்தபதி (ஆறுமுகம் சிற்பாலயம்)

திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வப்பிரம்மஸ்ரீ கலாபூசணம் ஆறுமுகம் கந்தசாமி ஸ்தபதி அவர்கள் கடந்த (28.05.2025) புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஈழத்து முதன்மை ஸ்தபதி ஆறுமுகம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னராசா வாலாம்பிகை தம்பதியரின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற சிந்தாதேவியின் அன்புக் கணவரும், கோகிலவாணி (வட்டுக்கோட்டை), றமேஸ் (கனடா), சதீஸ் (பிரான்ஸ்), ஒவியமாமணி ராயூ (ராயூ ஆட்ஸ் - பிரான்ஸ்), காலஞ்சென்ற தினேஸ் (தீபன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீகாந்தன், சுகிதா, பரீனா, சங்கீதா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற கலாசேகரி தம்பித்துரை ஸ்தபதி, நாகரத்தினம் (மணி - லண்டன்), காலஞ்சென்றவரகளான கலாபூசணம் ஜீவரட்ணம் ஸ்தபதி, இராசதுரை (முருகையா), துரைராசா ஸ்தபதி, மகாலிங்கம் (மகான்) மற்றும் கலாபூசணம் சிவலிங்கம் ஸ்தபதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற தவமணிதேவி, வைரமுத்து தவமணிதேவி, இராஜேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான சாரதா, இராஜேஸ்வரி, செல்வராணி, தங்கமணி மற்றும் சற்குணதேவி, சறோஜினிதேவி, செவ்வேந்திராதேவி, காலஞ்சென்ற சர்வேந்திரராஜா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், தேனுஜன், ப்ரித்திகா, யாழவன், விகேஸ், கவிநயன், மதுநயன், எழிலிசை, விசாகன், மகிழ்வன், முகிலவன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (01.06.2025) ஞாயற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மதியம் 1.00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

25/9 அரசடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 866 0302

(CS/3267) D*

# இறுதியாட்டத்தில் பெங்களூர்



ஐ.பி.எல். தொடரில் நேற்று இடம்பெற்ற 'முதலாவது குவாலிபையர்' ஆட்டத்தில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் கிங்ஸ் அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 101 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.
பதிலுக்குக் களமிறங்கிய பெங்களூர் அணி எந்தப் பதற்றமும் இல்லாமல் வெறும் 2 விக்கெட்டுக்களை மட்டுமே இழந்து 106 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. ஷோல்ட் ஆட்டமிழக்காமல் 56 ஓட்டங்களைப் பெற்றார்.
(ம)

# தனியார் பல்கலைப் பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்ய எதிர்ப்பு

கொழும்பு, மே 30
தனியார் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்களை மருத்துவசேவைகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இணைமருத்துவ சேவை பட்டதாரிகள், கொழும்புக் கோட்டை புகையிரதநிலையத்திற்கு முன்பாக நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தனியார் பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் பட்டங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும் தரம் குறைந்தவை என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் இந்த ஆர்ப்பாட்டத்தில் இணைந்திருந்தது.
(ச-33-6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 14 - 12 - 1938

மறைவு 24 - 05 - 2025



## திருமதி அழகம்மா நல்லையா

(பத்தர் மாஸ்ரர், Drammen வரதன் ஆகியோரின் தாயார்)

மாரீசன்கூடல், இளவாலையைப் பிறப்பிடமாகவும், கொழும்பையும் ஒஸ்லோவையும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா அழகம்மா நோர்வேயில் காலமானார். அன்னார் காலம்சென்ற தாவடியைச் சேர்ந்த நல்லையா ஆசிரியரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஸ்ரீசிவதாஸ், நிற்குணம் மற்றும் முருகதாஸ், கங்காதரன், பத்மநாதன், வசந்தினி, வரதன் ஆகியோரின் அன்பான தாயுமாவார். தர்ஷா, கம்ஷானந், லோசா, குணசீலன், மதுரா, பிரியா, மகிழன், கிருஷ்ணா, நாராயணி, ருத்தாரகன், யாழினி, டர்ஷன்.நிருஷாந்த், ஹரிணி ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

**இறுதிக் கிரியைகள்:**

**04.06.2025, புதன்கிழமை, காலை : 09.00** - Helsfyr gravlund kapell

**தகனம் : 13.00** - Alfaset gravlund

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயரில் மூழ்கியிருக்கும் உறவுகளுடன் நாமும் இணைகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தொடர்புகளுக்கு:
பத்தர் மாஸ்ரர் : 98 269 269
வரதன் (Drammen) : 91 513 632

தகவல்:
நல்லையா முருகதாஸ்
அளவெட்டி

# மரண அறிவித்தல்

மண்ணுலகில் 15 . 02 . 1952

விண்ணுலகில் 26 . 05 . 2025



## திரு. மார்க்கண்டு நாகராசா

யாழ்ப்பாணம் சங்குவேலியை பிறப்பிடமாகவும் இருபாலையில் மற்றும் இந்தியாவில் வசித்தவரும், தற்போது சங்குவேலி மானிப்பாயில் வசித்து வந்தவருமாகிய மார்க்கண்டு-நாகராசா அவர்கள் கடந்த (26.05.2025) திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களாகிய மார்க்கண்டு-இராசமணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வீரசிங்கம்-பவளம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தேவராணியின் அன்புக் கணவரும், தேவதாஸ் (பிரான்ஸ்), நவதாசன் (பிரான்ஸ்), சுதா (இந்தியா), கிரிஜா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகுதந்தையும், ஸ்ரீதர்சினி (ஸ்வீட்டி - பிரான்ஸ்), கமலதர்சினி (ராதிகா - பிரான்ஸ்), சிவகுமார் (சென்னை சில்க்(World Market) பிரான்ஸ்), சந்திரராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நாகலட்சுமி (அன்னக்கிளி), காலஞ்சென்ற ராசலட்சுமி (மாங்கிளி) மற்றும் விஜயலட்சுமி (மலர்), காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் பவளராணி, இலக்கணகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, பாலசுந்தரம் மற்றும் கமலாதேவி, கந்தசாமி, காலஞ்சென்ற பாஸ்கரன் மற்றும் சரஸ்வதி, செல்வநாயகி, காலஞ்சென்றவர்களான பாலசறோஜினி, சிவபாலசிங்கம், இந்திராணி, சண்முகராசா (பிரான்ஸ்), காலஞ்சென்ற விக்னேஸ்வரன் (பிரான்ஸ்-ஈசன்), கேதீஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஹரிஷ்லன் (பிரான்ஸ்), விதுஷ்லன் (பிரான்ஸ்), நிருஷ்லன் (பிரான்ஸ்), ஜதுஷ்லன் (பிரான்ஸ்), திருஷ்லன் (பிரான்ஸ்), லேயா (பிரான்ஸ்), நதுஷ்லன் (பிரான்ஸ்), இனியா (பிரான்ஸ்), ப்ரஜின் (பிரான்ஸ்), பிரவின் (பிரான்ஸ்), சிவனுஜா (இந்தியா), சிவசுதன் (இந்தியா), கீர்த்திகா (பிரான்ஸ்), சுபிக்ஷன் (பிரான்ஸ்), அபிக்ஷன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் சங்குவேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சங்குவேலி வடக்கு, மானிப்பாய்
([illegible] லேன்), யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் விருப்பத்துக்கே முன்னுரிமை தருவோம்

*மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் தெரிவிப்பு*

**மன்னார், மே 30**

**மன்னார் மாவட்டத்தில் காற்று, கனியமணல் போன்ற வளங்கள் காணப்படுகின்றன. ஆனாலும் பொருளாதார வளர்ச்சிக்காக மக்கள் விரும்பாத செயற்பாடுகளைச் செய்யமாட்டோம் என்று கூட்டுறவுப் பிரதி அமைச்சரும் மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான உபாலி சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
கடந்தகால அரசாங்கங்கள் ஊடாக முறையற்ற முறையில் சரியான அனுமதிபெறாமல் அரசியல் ரீதியான சலுகைகளை வைத்துக் கொண்டு கனிய மணல் அகழ்வில் நிறுவனங்கள் செயற்பட்டுள்ளன.
ஆனால் எங்களுடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் மக்களின் பாதுகாப்புச் சூழல், மக்களின் விருப்பம் என்பவற்றுக்கு முதன்மை அழிப்போம்.
எங்கள் நாட்டிலே எங்களுக்கு வருமானத்தை ஈட்டித் தரக்கூடிய பல வளங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் காற்று என்பது மிகச் சிறந்தவளம். அதேபோன்று இந்தக் கனிய மணல் மிகச் சிறந்த வளம் .
விஞ்ஞான ரீதியில் இவ்வகையான செயற்பாட்டினால் இப்பகுதிக்கு அல்லது சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுகிறதா? என்பதை ஆய்வு செய்து அதன் பிறகு அதற்கான நடவடிக்கைகளை எடுக்கக்கூடியதாக இருக்கும்.
எனினும் இதுதொடர்பில் மக்களிடம் எதிர்ப்பு இருக்கும் என்றால் அவ்வகையான நடவடிக்கைகளில் நாங்கள் ஈடுபடமாட்டோம் - என்றார். (ச-56)

## அரச அலுவலர்களுக்கு 'ஈ-பிரத்தியேக கோவை' பயிற்சி

யாழ்ப்பாணம், மே 30
யாழ்.மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான 'ஈ - பிரத்தியேக கோவை' தொடர்பான பயிற்சிநெறி யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.
நல்லூர்ப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் பயிற்சிநெறியின் வளவாளராகக் கலந்துகொண்டார். உதவி மாவட்டச் செயலர் செல்வி உ.தர்சினி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டப் பதில் செயலர் ம. பிரதீபன் கலந்துகொண்டார்.
இதன்போது, மாவட்டப் பதில் செயலர் ம. பிரதீபன், இந்த முறைமை ஊடாகத் தனிநபர் கோவையினைக் கணினிமுறையில் பேணுவதனால் உத்தியோகத்தர்களின் வேலைப்பளு குறைவடைவதுடன் வினைத்திறனான சேவையினை வழங்கக்கூடியதாக இருக்கும். இந்த முறைமையை யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் நடைமுறைப் படுத்தவுள்ளோம்- என்றார். (ச-25,66)

## கசிப்புடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், மே 30
யாழ். ஆனைக்கோட்டைப் பகுதியில் இளைஞர் ஒருவர் கசிப்புடன் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
புலனாய்வுத் தகவலுக்கமைவாக ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டைப் பகுதியில் வைத்து 750 மில்லிலீற்றர் கசிப்புடன் குறித்த இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
சந்தேகநபருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)

## அபிவிருத்திகளின்போது மதிப்பீடுகள் அவசியம்!

*பிரதமர் சுட்டிக்காட்டு*

யாழ்ப்பாணம், மே 30
நிர்வாகம், பொறுப்புக்கூறல் மற்றும் கொள்கைத் தயாரிப்பில் மதிப்பீட்டின் முக்கியத்துவம் மேலோங்கப்படுவது ஒரு சாதகமான நகர்வாகும். அபிவிருத்திச் செயன்முறைகள் தோல்வியடையும் போது அதன் தாக்கம் நிதி ரீதியாக மாத்திரமன்றி, ஜீவனோபாயத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.
அவர்மேலும்தெரிவிக்கையில், அபிவிருத்திச் செயன்முறைகள் தோல்வியடையும்போது அதன் தாக்கம் நிதி ரீதியாக மாத்திரமன்றி, ஜீவனோபாயத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதால், அபிவிருத்தி தொடர்பான மதிப்பீட்டை மேற்கொள்வது மிகவும் முக்கியமானது.
மதிப்பீட்டுக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கென நிறுவனக் கொள்ளளவை கட்டியெழுப்புதல், நம்பிக்கைக்குரிய தரவுகளுக்கென காலத்துக்கேற்ற அணுகல் உட்பட சாட்சியங்கள் மற்றும் தொடர் கல்வியை வரவேற்கும் நிர்வாக கலாசாரமொன்றை மேம்படுத்தவேண்டும் - என்றார். (ச-25,26)

## மாபெரும் கலைவிழா

யாழ்ப்பாணம், மே 30
ஈழத்தமிழ் கலைஞர் ஒன்றியத்தின் யாழ் பிராந்தியம் நடத்தும் மேற்படி கலைவிழாவில் தென்னிந்திய தொலைக்காட்சி புகழ் ஈழத்துப் பாடகர்கள் உட்படப் பலர் பங்குபற்றவுள்ளனர்.
ஈழத்தமிழ் கலைஞர் ஒன்றியத்தின் யாழ் பிராந்தியம் நடத்தும் இந்தக் கலைவிழா யாழ்ப்பாணம் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் ஜூன் மாதம் முதலாம் திகதி மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.
நாடளாவிய ரீதியில் மொத்தம் ஒன்பது பிராந்தியக் கிளைகளைக் கொண்டு இயங்கிவரும் இந்தக் கலைஞர் ஒன்றியமானது, ஈழத்துக் கலைகளை சமூக ஆரோக்கியத்துக்கான மக்களுக்குரிய கலைகளாக மெருகேற்றி அதற்கூடாக மானுட சுதந்திரத்தையும் சமத்துவ நெறியையும் அடிப்படையாகக் கொண்ட தமிழ்ப் பண்பாட்டு உருவாக்கத்துக்காகப் பயணித்துக் கொண்டிருக்கிறமை குறிப்பிடத்தக்கது. (ம)

## தே.ம.சக்தியின் உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம்

மன்னார், மே 30
உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய உறுப்பினர்களுக்கான சத்தியப்பிரமாண நிகழ்வு கட்சியின் மன்னார் மாவட்டக் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.
இம்முறை மன்னார் மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி சார்பாக போட்டியிட்ட 11 நபர்கள் நேரடியாக வட்டார ரீதியாக வெற்றிபெற்று உள்ளூராட்சிமன்றங்களின் உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர் என்பதுடன் 8 உறுப்பினர்கள் போனஸ் ஆசனம் மூலம் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-25,56)

## நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம், மே 30
நீர்வேலிப் பிரதேசத்தில் 700 வரையிலான வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்க்கான ஏ.ஆர்.வி. தடுப்பூசி மருந்துகள் ஏற்றப்பட்டுள்ளன.
கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரிப் பிரிவின் ஜே/267, ஜே/268, ஜே/269, ஜே/270 ஆகிய நான்கு கிராம சேவகர் பிரிவுகளிலும் உள்ள வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி மருந்துகள் ஏற்றப்பட்டுள்ளதாகப் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கே. உதயபாலா தெரிவித்தார். (ச-25, 17)



## மணல் அகழ்வுக்கு எதிராக கடும் நடவடிக்கை பாயும்!

கிளிநொச்சி ஒருங்கிணைப்புக் குழுவில் தீர்மானம்

கிளிநொச்சி, மே 30
கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் சட்டவிரோத மணல் அகழ்வுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுப்பது என்று கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், மாவட்டச் செயலகத்தில் அமைச்சர் சந்திரசேகர் மற்றும் வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் இணைத்தலைமையின் கீழ் இடம்பெற்றது. இதன்போதே, மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டதுடன், சட்டவிரோத மணல் அகழ்வுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.
அத்துடன், கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையத்தை கரைச்சி பிரதேசசபையினிடம்கையளித்து, எதிர்காலத்தில் கரைச்சி பிரதேச சபைமூலம் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், இளங்குமரன், ரஜீவன், கஜேந்திரகுமார், அர்ச்சுனா ஆகியோரும், இராணுவ மற்றும் கடற்படை அதிகாரிகளும், சிவில் அமைப்புக்களின் பிரதிநிகளும் இந்தக் கலந்துரையாடல்களில் கலந்து கொண்டனர். (ம-113)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள்களுடன் சுன்னாகத்தில் பலர் கைது

யாழ்ப்பாணம், மே 30

யாழ்ப்பாணம் சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்றும், நேற்றுமுன்தினமும் போதைப்பொருள்களுடன் ஏழுபேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் மூவர் போதை மாத்திரைகளுடனும், இருவர் ஐஸ் போதைப்பொருளுடனும், இருவர்ஹெரோய்ன் போதைப்பொருளுடனும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் 3 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோய்னுடன் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவர் ஏற்கனவே 8 கிராம் ஹெரோய்னுடன் கைதுசெய்யப்பட்ட வழக்கும் நீதிமன்றத்தில் நடைபெற்றுவருகின்றது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-ம-27)

## இரு...

விவசாயிகளுக்கும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

தொல்பொருள் தளத்தை சேதப்படுத்தியதாகக் கூறி, பௌத்த தேரரான கல்கமுவ சாந்தபோதி தேரர் தொல்பொருள் திணைக்களத்துக்கு வழங்கிய முறைப்பாட்டைத் தொடர்ந்து, மே மாதம் 10ஆம் திகதி அவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

அவர்கள் இருவருக்கும் எதிரான வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, சந்தேகநபர்கள் இருவரும் ஜூன் மாதம் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-ம-26)

## குண்டுவெடிப்பு,...

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பாக, சட்ட மருத்துவ அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கை, முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டது. இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு கொக்கிளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொக்குத்தொடுவாய் பகுதியில் அவதானிக்கப்பட்ட மனித புதைகுழி தொடர்பான அகழ்வுப் பணிகள் நிறைவுற்றுள்ளன. எனினும், தொடர்ச்சியான வழக்கு விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. இந்த வழக்கு நேற்று வியாழக்கிழமை விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது சட்ட மருத்துவ அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட 52 மனித எலும்புக்கூடுகளின் வயது, பாலினம், இறப்புக்கான காரணம் என முக்கியமான விபரங்கள் அடங்கிய தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இறந்தவர்கள் யார்? என அடையாளம் காணப்படவில்லை.

அந்தப் பணிகளுக்காக அல்லது அடையாளப்படுத்தலுக்காக காணாமலாக்கப்பட்டோரின் சங்கப் பிரதிநிதிகளை ஒத்துழைக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இறப்புக்கான காரணங்களாக குண்டுவெடிப்பு, சூட்டுக்காயங்கள் என்பன காணப்படுகின்றன. சில என்புத் தொகுதிகளில் சில பகுதிகளே இருந்தமையால் மரணத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை.' ஒகஸ்ட் மாதம் 28ஆம் திகதிக்கு வழக்குத் தவணையிடப்பட்டுள்ளது - என்றார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி நிரஞ்சன் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## 10 ஆண்டுகளில்...'

விடயங்களையும், 'மீண்டெழும் அலைகள்' என்ற திட்டத்தின் கீழ் மேம்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தை சகல வழிகளிலும் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது. 2025ஆம் ஆண்டுமுதல் 2035ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியை இலக்குவைத்தே இந்தத் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு 'மீண்டெழும் அலைகள்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது - என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான க. இளங்குமரன், ஜெ.ரஜீவன், ஸ்ரீபவானந்தராஜா, அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் இணைப்பாளர் ஸ்ரீவாகீசன், தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினரும், முன்னாள் விரிவுரையாளருமான சு.கபிலன் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ-ச-26)

## தமிழரசுக்...

படும் ஒரு விடயத்தை வடக்கில் ஏன் செய்யமுடியாது? இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரான சரத் வீரசேகர.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

காணி அமைச்சால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெறுமாறு நாம் வலியுறுத்தினோம். இதற்கமைய குறித்த வர்த்தமானி அறிவித்தலை தற்காலிகமாக நீக்கியுள்ள அரசாங்கத்துக்கு நன்றி என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி தெரிவித்துள்ளது.

வெள்ளையர்களின் ஆட்சிகாலத்தில் இழைக்கப்பட்ட அநீதியை சீர்செய்யும் நோக்கிலேயே குறித்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. வடக்கில் மட்டும் அல்ல தெற்கிலுள்ள காணிகள் தொடர்பிலும் நிர்ணயம் இடம்பெற்றுள்ளது. ஏனெனில் தமக்குரிய காணி என்பதற்குரிய சான்று இருந்தால் உரித்து வழங்கப்படும். இல்லையேல் அரசாங்கக் காணியென அடையாளப்படுத்தப்படும்.

முழு நாட்டிலும் செய்யப்படும் ஒரு விடயத்தை வடக்கில் செய்யக்கூடாதெனக் கூறுவதன்மூலம், 'இது எமது இடம், மத்திய அரசுக்கு அதில் உரித்து இல்லை' என்பதை அவர்கள் வலியுறுத்துகின்றனர். இந்த விடயத்தில் அரசாங்கமும் மௌனம் காத்தால், நாடு சமஷ்டியாக்கப்பட்டுள்ளது என்பதை அரசாங்கமும் ஏற்கின்றது என்றாகிவிடும் - என்றார். (அ-ம-44)

## அதிகமான...

மீட்கப்பட்ட 52 என்புத் தொகுதிகளில் 31என்புத் தொகுதிகள் பெண்களுடையவை என்றும், 21 என்புத் தொகுதிகள் ஆண்களுடையவை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## தவறான...

அந்த நபர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-26)

## இனிமேல்...

அமைச்சர் ஒருவருக்கு மேலதிகமாக, வடமாகாண ஆளுநர் இணைத்தலைவராக நியமிக்கப்பட்டு வந்திருந்தார். ஆனால், தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்காலத்தில் அந்த அங்கீகாரம் ஆளுநருக்கு இதுவரை வழங்கப்படவில்லை.

இதன்படி, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரே ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக செயற்பட்டு வந்த நிலையில், தற்போது வடக்கு ஆளுநர் இணைத்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## யாழ்ப்பாண...

இ.சந்திரசேகர், வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோரின் இணைத் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-125)

## லஞ்சமாகப்...

துள்ளனர். இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவுக்குக்கிடைத்த முறைப்பாட்டுக்கு அமையவே அந்தக் கிராம அலுவலர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், அவரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-26)

## மஹிந்தானந்த...

கள் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் நிறுவனம் ஒன்றின் மூலம் 14 ஆயிரம் 'கரம்போர்ட்' மற்றும் 11 ஆயிரம் 'டாம்போர்ட்' ஆகியவற்றைக் கொள்வனவுசெய்து விளையாட்டுக்கழகங்களுக்கு வழங்கியதன் மூலம், அரசாங்கத்துக்கு 53 மில்லியன் ரூபா இழப்பை ஏற்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டு அவர்கள் இருவருக்கும் எதிராக முன்வைக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்றுத் தீர்ப்புக்காக எடுக்கப்பட்டது. இதன்போது, இருவருக்கும் எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டதால், மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு 20 வருடங்கள் சிறைத்தண்டனையும், நளின் பெர்னாண்டோவுக்கு 25 வருடங்கள் சிறைத்தண்டனையும்விதிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## இனப்படுகொலை...

என்று பெரமுனவின் முக்கியஸ்தரான சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இறுதிப்போரின்போது இனப்படுகொலை இடம்பெற்றுள்ளது எனக் கூறி வெள்ளவத்தையிலும், நீர்கொழும்பிலும் நினைவுகூரல் இடம்பெற்றுள்ளது. இவற்றைத் தடுப்பதற்கு அரசாங்கம் முற்படவில்லை.

இலங்கையில் தமிழினப்படுகொலை நடக்கவில்லை. 2 லட்சத்து 95 ஆயிரம் பணயக்கைதிகளை மீட்டு போரை வெற்றிகொண்ட உலகில் ஒரே இராணுவம் இலங்கையில் மட்டுமே உள்ளது. இப்படியான இராணுவத்தினருக்கு எதிராக இனப்படுகொலை குற்றச்சாட்டை முன்வைப்பது நகைப்புக்குரிய விடயமாகும்.

வடக்கில் இடம்பெற்றுவந்த நினைவேந்தல் தற்போது தெற்கில் நடைபெறத் துவங்கியுள்ளது. இந்த விடயத்தில் அரசாங்கம் மௌனம் காக்கின்றது. இது ஏற்புடைய விடயமல்ல. வன்முறை மற்றும் பயங்கரவாதத்துக்கு இது வழிவகுக்கக்கூடும் என்பதை அரசாங்கம் புரிந்து செயற்படவேண்டும் - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

கௌதாரிமுனை பிரதான வீதியில் உள்ள ஒரு பக்கம் கடல் மறுபக்கம் உயர் மின் அழுத்த வடம் செல்லும் பிரதான வீதி கொண்ட 14.5 ஏக்கர் உறுதிக்காணி அவசர பணத்தேவை கருதி விற்பனைக்கு உள்ளது. விலை பேசித் தீர்மானிக்கலாம்.

**077 736 8286, 076 635 6691**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் ஊரெழுவில் பலாலி வீதிக்கு அருகாமையில் 18 பரப்பு காணி விற்பனைக்குண்டு 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.

- பலாலி வீதி ஊரெழு பிள்ளையார் கோயில் முன், வீதி 150m தூரத்தில்
- நல்ல சூழல் நன்னீர் ஊற்று நிலம் செம்மண் காணி
- குடியிருப்புக்கள் சூழவுள்ள காணி

ஒரு பரப்பின் விலை இருபத்தி ஐந்து இலட்சம் ரூபாய் 2500000/= மட்டுமே

பார்வையிடும் நேரம் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு - **076 739 0413**
**077 623 4204**

## வேலைவாய்ப்பு

யாழ் நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் மற்றும் சமுத்திரா ரேடர்ஸ் (Hard ware) நிறுவனங்களுக்கான வேலை வாய்ப்பு. ஆண்,பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**076 151 7481, 077 494 9683**

## குறைந்த விலையில் இயந்திரங்கள் விற்பனைக்கு

யாழில் உள்ள சமுத்திரா ரேடர்ஸ் நிறுவனத்தில் இடியப்பம் பொழியும், வெண்ணெய் நீக்கும்,மா . மிளகாய் அரைக்கும், தும்பு முட்டாஸ், சோளம் பொரி தயாரிக்கும் இயந்திரங்கள், ஜெனறேரர்கள் மற்றும் டீசல் எஞ்சீன் பாட்ஸ். விற்பனைக்கு உண்டு..

(CS/58424B) J-1

**077 494 9683, 021 222 2938**

## நினைவுக்கூட்டம்

வலி. கிழக்கு சைவ சமய அருள்நெறி மன்றம் நடத்தும் மன்றத்தின் ஸ்தாபகர் தலைவர் வேதாகமகிரியாபானு சிவஸ்ரீ பிரம்மஸ்ரீ சோ. இ. பிரணதார்த்திஹரக் குருக்களின் முதலாவது ஆண்டு நினைவு அஞ்சலிக்கூட்டம் கோப்பாய் ஸ்ரீ வீரபத்திரர் ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளை சனிக்கிழமை மாலை 4மணிக்கு இடம்பெறவுள்ளது.

குருக்களின் வாழ்க்கையும் அவரது வழிகாட்டுதலும் பற்றிய கண்ணோட்டத்தை சைவப்புலவர் கந்த. சத்தியதாசனும், நினைவஞ்சலி உரைகளை ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. ஸ்ரீ சற்குணராசா, யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை மேநாள் துறைத்தலைவர் கலாநிதி மா. வேதநாதன், மருத்துவக் கலாநிதி வை. தியாகராஜா, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மா. அனந்தலெச்சுமி ஆகியோர்கள் ஆற்றவுள்ளார்கள். நினைவுப்பேருரையை சிவப்பிரம்மஸ்ரீ தியாக. மயூரகிரி குருக்கள் " ஈழத்து அந்தணர் வாழ்வியல் சமகாலநோக்கு எனும் விடயப்பொருளில் ஆற்றவுள்ளார். (ச-41)

## மணமகள் தேவை

யாழ் இந்து 1989 இல் பிறந்த சுவாதி நட்சத்திரம் பாவநிலை 5 Phd in chemistry Post doctor in China University மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**076 899 5179, 077 466 0914**

## ஆசிரியர் தேவை

யாழ் நகரில் இயங்கும் கல்வி நிறுவனமொன்றிற்கு தரம் 6.7.8 வகுப்புகளுக்கு அனுபவமும், திறமையும் உள்ள விஞ்ஞான ஆசிரியர் தேவை.

தொடர்பு: **077 459 8440**

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர்
## பாலநாதன் செல்வராணி

(ஓய்வுபெற்ற உப தபால் அதிபர்)

செல்வராணி - செழுமை கொண்ட நற்பெயர்,
செல்வங்களால் அல்ல, செம்மையால் வாழ்ந்தவர்.
தாய்மையின் திருவுருவம் நீ ,
தாங்கிய சுமைகளோ எண்ணற்றவை.
தூய்மை நிறைந்த உன் வாழ்நாள்,
தோற்றத்திலும் தெரிந்த உன் நேர்மை.
மனம் வரை பதிந்த உன் சிரிப்பு,
மறக்க முடியாத இசை போல் ஒலிக்கிறது.
அழியாத நினைவு தீபம் நீ ,
அழகு கொண்ட நம் குடும்பத்தின் நிழலும் நீ.
தங்கம் போல பொதிந்த உன் வார்த்தைகள்,
தங்கியுள்ளன எங்கள் இதயத்தில் இன்றும்.
முப்பது நாட்கள் ஒரு கணம் போன்றது,
ஆனால் உன் நினைவு காலம் கடந்தது.
நீ இல்லை என வரிகள் சொன்னாலும்,
உன் வாழ்க்கை தடங்களை அழிக்க முடியாது காலத்தால்.

அன்னை மடியில் 08.06.1961
ஆண்டவன் அடியில் 30.04.2025

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(CS/58418) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org